# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No. 25/2022

Deposition of witness for : PW5

Name : பாலாஜி

Father's / Husband Name : பழனிசாமி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 14th day of October 2024.

**முதல் விசாரணை:–**

நான் மேக்காடு, சங்ககிரி மேற்கில் குடியிருந்து வருகிறேன். 1வது எதிரி எனது தாத்தா. மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. இறந்துபோன சேகர் (எ) ராமசாமி எனது மாமா ஆவார். அ.சா.–1 எனது அம்மா. அ.சா–2 எனது பாட்டி. கொரனா காலத்தில் நான் என் மாமா வீட்டில் இருந்தேன். அவர் பால் கறந்து பக்கத்தில் இருப்பவர்களுக்கு விற்பனை செய்வார். என் மாமா மாடுகளை வாங்கி விற்பனை செய்வார். என் மாமா குடிபோதைக்கு அடிமையாக இருந்தார். என் மாமாவிற்கு திருமணமாகி விவகாரத்து ஆகிவிட்டது. அவர் வேறு ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தார். 03.03.2021 அன்று எனது மாமா இரவு

9.00 மணிக்கு இறந்துவிட்டதாக மறுநாள் சொன்னார்கள். மறுநாள் 10.00 மணிக்கு காவல் நிலையம் சென்றேன். வீட்டிற்கு போய் பார்த்தேன். அங்கு போலிசார் மட்டும் இருந்தார்கள். வேறு எதுவும் எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மாமா சேகர் நிறைய செலவு செய்வார் என்றும், கடந்த ஜனவரி மாதம் அவருடைய செல்போன் நெம்பர் 9842787897 என்ற போன் வேலை செய்யாததால் எனது தாத்தாவின் செல்லை கேட்டார் என்றும், நான் அவருக்கு தெரியாமல் ஆட்டோ ரிக்கார்டு ஆன் செய்து கொடுத்தேன் என்றும், அவர் ஒரு பெண்ணுடன் பேசுவதை நான் கேட்டேன் என்றும், அதை பற்றி எனது தாத்தாவிடம் சொன்னேன் என்றும், பிறகு இந்தியன் பேங்க் எனது மாமாவின் அக்கவுண்டில் ஸ்டேட்மெண்ட் வாங்கி பார்த்தேன் என்றும், அதில் ரூ. 1,00,000/- முத்துவேல் என்பவரது அக்கவுண்டிற்கு அனுப்பியிருந்தார் என்றும், அந்த முத்துவேல் மேற்படி பெண்மணியின் கணவர் என்றும், அது சம்மந்தமாக எனது தாத்தா, எனது மாமாவிடம் கேட்டதற்கு அவரை கம்பியால் அடித்து தாத்தாவின் காலை உடைத்துவிட்டார் என்றும், அதன் பிறகு பிப்ரவரி மாதம் 5 மாடுகளை விற்றுவிட்டார் என்றும், அந்த பணத்தை வீட்டில் கொடுக்கவில்லை என்றும், அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், 1வது எதிரி எனது தாத்தா என்பதால் எதிரிகளுக்கு சாதகமாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஒம்/- L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.